# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 (2023)**
**General Certificate of Education (Ord.Level) Third Term Examination- 2022 (2023)**

| நேரம்: 3.00 மணித்தியாலங்கள் | குடியியற் கல்வி - I, II<br>Civic Education- I, II | பாட எண் : 62 T I, II |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................

மேலதிக வாசிப்பு நேரம்: 10 நிமிடங்கள்

வினாப் பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**கவனிக்க:**
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.

### குடியியற் கல்வி - I

01. பேராசிரியர் ஹரலட்.ஜே.லஸ்கியின் வரைவிலக்கணத்தின்படி மனிதன் தனது சமூக வாழ்க்கையை செவ்வனே கொண்டு செல்லத் தேவையான நிபந்தனைகள் எவ்வாறு அழைக்கப்படும்?
(1) சுதந்திரம் (2) சமத்துவம் (3) உரிமைகள் (4) கடமைகள்

02. பின்வரும் நாடுகளுள் பல கட்சி முறையை பின்பற்றும் நாடு எது?
(1) சீனா (2) இந்தியா (3) ஐக்கிய அமெரிக்கா (4) வடகொரியா

03. கி.பி 5ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 15ஆம் நூற்றாண்டுவரையில் ஐரோப்பாவில் நிலவிய சமுதாய அமைப்பு முறை
(1) பிரபுத்துவ சமுதாய அமைப்பு முறை
(2) முதலாளித்துவ சமுதாய அமைப்பு முறை
(3) நிலமானிய சமுதாய அமைப்பு முறை
(4) சமதர்ம சமுதாய அமைப்பு முறை

04. கிரேக்கத்தில் பிரதான ஆட்சி நிறுவனமான மக்கள் மன்றத்தில் காணப்பட்ட ஆட்சி முறை
(1) மன்னராட்சி முறை
(2) சோஷலிச ஆட்சிமுறை
(3) நேரடி சனநாயக ஆட்சிமுறை
(4) பிரபுத்துவ ஆட்சிமுறை

05. தேசிய அரசு பலமடைவதற்குக் காரணமான அரசியல் சிந்தனையாளர் யார்?
(1) பேராசிரியர் காணர் (2) கலாநிதி.கே.சீ.வியர்
(3) T.B டெயிலர் (4) நிக்கலோ மக்கியவல்லி

06. தேர்தல் ஒன்றில் பிரசைகளின் கடமைகள் தொடர்பான கூற்றுக்களில் **பொருத்தமற்றது**,
(1) தேர்தல் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படல்.
(2) அரசியற் கட்சி ஒன்றினை ஆரம்பித்தல்.
(3) தேர்தலில் வாக்களித்தல்.
(4) தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஏனையவர்களின் உரிமைகளை மீறாது செயற்படல்.



kalvi.lk

07. பின்வருவனவற்றுள் சனநாயக ஆட்சிமுறையின் முக்கியத்துவமாக அமைவது,
    (1) தனியார் திறமைக்கும் இயலுமைக்கும் கட்டுப்பாடுகள் விதித்தல்
    (2) தனிமனித அபிவிருத்திக்கு முக்கியத்துவமளித்தல்.
    (3) உரிமைகள் அனுபவிப்பதில் வேறுபாடுகள் காட்டுதல்.
    (4) பொரும்பான்மை இன மக்களை ஆட்சியில் இணைத்துக்கொள்ளல்.

08. பின்வரும் நாடுகளில் கூட்டாட்சி நிலவும் நாடு **அல்லாதது,**
    (1) ஐக்கிய இராச்சியம்    (2) இந்தியா    (3) சுவிட்சர்லாந்து    (4) ஐக்கிய அமெரிக்கா

09. மாகாணசபையொன்றின் அதிகாரங்களில் II ஆம் நிரலில் உள்ளடக்கிய விடயமாக அமைவது,
    (1) பொருளாதாரத் திட்டமிடல்
    (2) விவசாயமும் கமநலச் சேவையும்
    (3) சமூக சேவைகளும் புனர்வாழ்வும்
    (4) வெளிவிவகார நடவடிக்கை

10. ஐக்கிய அமெரிக்காவில் அரசியல் கட்டமைப்பில் ஒவ்வொரு மாநிலத்தில் இருந்தும் செனட்சபைக்கு நியமனம் செய்யப்படும் பிரதிநிதிகளின் எண்ணிக்கை,
    (1) 2 பிரதிநிதிகள்    (2) 3 பிரதிநிதிகள்    (3) 4 பிரதிநிதிகள்    (4) 5 பிரதிநிதிகள்

11. பின்வருவனவற்றுள் சுவிட்சர்லாந்தின் அரசியல் கட்டமைப்பில் கென்ரன்களுக்குரிய அதிகாரம் எது?
    (1) வெளிவிவகாரம்
    (2) பாதுகாப்பும், இராணுவ நடவடிக்கையும்
    (3) தகவல் பரிமாற்றம்
    (4) வங்கி நடவடிக்கைகள்

12. இலங்கையில் அதிகாரப் பகிர்வு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பிரயத்தனங்களில் 1965 இல் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் எது?
    (1) டட்லி - செல்வா ஒப்பந்தம்    (2) பண்டா - செல்வா ஒப்பந்தம்
    (3) ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தம்    (4) ஜே.ஆர் - ராஜீவ் ஒப்பந்தம்

13. பின்வருவனவற்றுள் நல்லாட்சியின் அடிப்படைப் பண்புகளுள் அடங்காதது,
    (1) ஊழல்களற்ற முறைகேடுகளற்ற ஆட்சியும் நிர்வாகமும்.
    (2) வெளிப்படைத்தன்மையற்ற வகையில் செயற்படல்.
    (3) வளங்களை வினைத்திறனான வகையில் பயன்படுத்துதல்.
    (4) ஊடக சுதந்திரத்தைப் பாதுகாத்தல்.

14. "வேற்றுமைக்கு மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துதல்" என்னும் பன்மைப் பண்பாட்டுத் தன்மையை இலக்காகக் கொண்டு செயற்படும் ஆசிய நாடு எது?
    (1) சிங்கப்பூர்    (2) தாய்லாந்து    (3) வியட்நாம்    (4) பாகிஸ்தான்

15. பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தில் மக்கள் ஒற்றுமையுடன் செயற்படுவதன் மூலம் கிடைக்கும் அனுகூலம்,
    (1) முரண்பாடுகள் ஏற்படும் விதத்தில் செயற்படல்.
    (2) பெரும்பான்மை மக்களின் சமயத்தை பின்பற்றுமாறு அறிவுரை வழங்குதல்.
    (3) தேசிய ஐக்கியம் மற்றும் சகவாழ்வு நிலை விருத்தியடையும்.
    (4) மத மாற்றல்களை ஊக்குவிக்கப்படுதல்.


kalvi.lk

16. தனியாட்களின் சேவைகள் மற்றும் விருப்பங்களை நேரடியாகப் பூர்த்தி செய்ய உதவுகின்ற பொருட்கள் எவ்வாறு அழைக்கப்படும்?
(1) ஆடம்பரப் பொருட்கள் (2) நுகர்வுப் பொருட்கள்
(3) இடைநிலைப் பொருட்கள் (4) மூலதனப் பொருட்கள்

17. உழைப்பு / ஊழியம், முதலீடு / மூலதனம் ஆகிய இரு உற்பத்திக் காரணிகளுக்குமான கொடுப்பனவாக அமைவன முறையே,
(1) கூலி, வட்டி (2) வட்டி, கூலி (3) வட்டி, இலாபம் (4) இலாபம், வாடகை

18. முதலாளித்துவ பொருளாதார முறையின் பண்புகளில் அடங்குவது,
(1) உற்பத்திக் காரணிகள் அனைத்தும் அரசுடமையாக்கப்பட்டிருத்தல்
(2) மத்திய திட்டமிடல் சபையின் மூலம் பொருளாதாரம் நிர்வகிக்கப்படல்.
(3) தனியார்துறை முதலீடுகள் ஊக்குவிக்கப்பட்டிருத்தல்.
(4) வருமானம் சமமற்ற முறையில் பகிரப்பட்டிருத்தல்.

19. ஜொஹான் கல்டுனின் மோதல் முக்கோண மாதிரியில் சமூக, பொருளாதார, அரசியல் நிலைமைகளை விளக்குவதாக அமையும் காரணி,
(1) மனப்பாங்கு (2) நடத்தை (3) சூழ்நிலை (4) திறமை

20. மூன்றாம் தரப்பினர் மூலம் மோதலுக்குள்ளான இரு தரப்பினரையும் சம்மதிக்கச் செய்யும் மோதல் தீர்வு முறை எது?
(1) தீர்ப்புக்கூறல் (2) கலந்துரையாடல் (3) இணக்கப்பாடு (4) உடன்படுதல்

21. நீதவான் நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றங்களின் தீர்ப்புக்களுக்கு எதிரான மேன் முறையீடுகளை விசாரணை செய்யும் நீதிமன்றம்,
(1) மேல் நீதிமன்றம் (2) மாகாண மேல் நீதிமன்றம்
(3) உயர் நீதிமன்றம் (4) மேன் முறையீட்டு நீதிமன்றம்

22. மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளை நியமிப்பவர்,
(1) பிரதம நீதியரசர் (2) சட்டமா அதிபர் (3) சனாதிபதி (4) நீதி அமைச்சர்

23. சட்டத்தின் பிரதான குறிக்கோள்,
(1) மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்.
(2) மக்கள் மத்தியில் சட்டம் தொடர்பான அறிவை வளர்த்தல்.
(3) மக்களின் வாழ்க்கை, உரிமைகள், சொத்துக்கள் ஆகியன பாதுகாக்கும் வகையில் மனித நடத்தைகளை நிர்வகித்தல்.
(4) சட்டத்தினை மதித்தலும் சட்டத்துக்கு கீழ்படிவதனை உறுதி செய்தலும்.

24. 1996ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின்படி உருவாக்கிக் கொள்ளப்பட்ட அமைப்பு,
(1) நீதிச்சேவை ஆணைக்குழு
(2) மனித உரிமைகள் ஆணைக்குழு
(3) பொதுச்சேவை ஆணைக்குழு
(4) தேர்தல்கள் ஆணைக்குழு

25. ஒரு நாட்டின் அடிப்படைச் சட்டமாக அமைவது,
(1) அரசியல் யாப்பு (2) குற்றவியல் சட்டம் (3) பொதுச் சட்டம் (4) குடியியல் சட்டம்

26. இலங்கையில் முதன் முதலாக மந்திரிசபை (கெபினட்) ஆட்சி முறையை அறிமுகம் செய்த அரசியல் யாப்பு எது?
(1) டொனமூர் (2) கோல்புறூக் (3) மனிங் (4) சோல்பரி


kalvi.lk

27. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் செயற்பட்டு வந்த நிர்வாக அலகுகளைக் குறித்துகாட்டும் விடைத் தொகுதி,
    (1) இராசரட்டை, மலையரட்டை, திசாவை
    (2) இராசரட்டை, தக்கிணதேசம், அட்டதஹஸ்ரட்டை
    (3) திசாவை, கோரளை, பற்று
    (4) கோரளை, பற்று, இராசரட்டை

28. பின்வருவனவற்றுள் 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்பில் உருவாக்கப்பட்ட பிரதான அரசியலமைப்பு மாற்றம் எது?
    (1) அரசியல் அமைப்பு நீதிமன்றம்.
    (2) பாராளுமன்ற ஆணையாளர் நாயகம் பதவி.
    (3) உயர் நீதிமன்றம் ஸ்தாபிக்கப்பட்டமை.
    (4) ஆளுநர் நாயகம் பதவி.

29. இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பணிகளில் பொதுப்பயன்பாட்டுச் சேவையினுள் உள்ளடங்கும் பணியாவது,
    (1) வடிகால்களை அமைத்தலும் திருத்துதலும்.
    (2) பொதுக்குளியல் இடங்களைப் பராமரித்தல்.
    (3) பொது மலசலகூடங்களை அமைத்தலும் பரிபாலித்தலும்.
    (4) உள்வீதிகளை அமைத்தலும் பராமரித்தலும்.

30. உயிர் வாழவும், சுதந்திரமாகச் சிந்திக்கவும், தனிப்பட்ட பாதுகாப்புக்குமான உரிமை இவை அடங்கும் உரிமைத்தொகுதி எது?
    (1) குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள்
    (2) பொருளாதார சமூக கலாசார உரிமைகள்
    (3) அரசியல் மற்றும் பொருளாதார உரிமைகள்
    (4) சமூக மற்றும் கலாசார உரிமைகள்

31. ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமை சமவாயத்தின் 7ஆவது உறுப்புரையில் குறிப்பிடப்படும் விடயம்,
    (1) 18 வயதுக்கு குறைந்தோர் பிள்ளைகள் அல்லது சிறுவர்.
    (2) வாழ்வதற்கான உரிமை அனைத்துப் பிள்ளைகளுக்கும் உண்டு.
    (3) கல்வியைப் பெற்றுக்கொள்ளும் உரிமை அனைத்து சிறுவர்களுக்கும் உண்டு.
    (4) குழந்தை பிறந்ததும் பதிவு செய்யப்படல் வேண்டும்.

32. ஆதிவாசிகள் மற்றும் பழங்குடி மக்கள் பிரிவினர் தொடர்பான **தவறான** கருத்து எது?
    (1) 1989ஆம் வருடத்தில் ஆதிவாசிகள் மற்றும் பழங்குடிகள் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது.
    (2) ஆதிவாசிகள் விசேடமான கலாசாரத்துக்கு உரித்தானவர்கள்.
    (3) ஆதிவாசிகளுக்கென காப்புறுதித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.
    (4) இலங்கையில் வாழும் ஆதிவாசிகள் “வேடுவர் சமூகம்” என அழைக்கப்படுகின்றனர்.

33. பின்வருவனவற்றுள் சட்ட ரீதியான கடமை எது?
    (1) சுற்றாடலைப் பேணுதல்
    (2) அரசியல் யாப்பினைப் பாதுகாத்தல்
    (3) மூத்தோரைப் பாதுகாத்தலும், பராமரித்தலும்
    (4) நாட்டின் வளங்களைப் பாதுகாத்தல்

34. இந்தோனேசியாவின் தலைநகர் ஜகார்த்தாவை தலைமையகமாகக் கொண்டு 1967ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பிராந்திய அமைப்பு எது?
    (1) ஆசியான் அமைப்பு (ASEAN)
    (2) கொழும்புத் திட்டம் (COLOMBO PLAN )
    (3) சார்க் அமைப்பு (SAARC)
    (4) பிம்ஸ்டெக் அமைப்பு (BIMSTEC)


kalvi.lk

35. சூழலை ஒயிகஸ் (oikes) எனக் குறிப்பிட்டவர்கள்,
(1) பண்டைய எகிப்து நாட்டினர் (2) பண்டைய கிரேக்க நாட்டினர்
(3) பண்டைய சீன நாட்டினர் (4) பண்டைய இந்திய நாட்டினர்

36. ❖ உலக சமாதானத்தையும் பாதுகாப்பையும் முன்னெடுத்தல்
❖ தேசங்களுக்கிடையிலான நட்புறவை வளர்த்தல்
❖ மனித உரிமைகளைப் பாதுகாத்து உறுதிப்படுத்துதல்

மேற்கூறப்பட்ட நோக்கங்களை கொண்ட சர்வதேச அமைப்பு எது?
(1) பொதுநலவாயம் (COMMON WEALTH)
(2) ஐக்கிய நாடுகள் சபை (UN)
(3) சார்க (SAARC)
(4) பிம்ஸ்டெக் (BIMSTEC)

37. பௌதீக வாழ்க்கைப் பண்புச்சுட்டெண் (PQLI) இன் சுட்டியைத் தயாரிப்பதற்குத் தேவையான மூன்று அம்சங்களில் ஒன்று பிறப்பின் போதான ஆயுள் எதிர்பார்ப்பாகும். ஏனைய இரண்டும் யாவை?
(1) எழுத்தறிவு, பிரசவத்தாய் மரணம்
(2) சிசுமரணவீதம், கொள்வனவுச் சக்தி
(3) கல்வி, கொள்வனவுச் சக்தி
(4) எழுத்தறிவு, சிசுமரணவீதம்

38. காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் விளைவு யாது?
(1) எல்னினோ பாதிப்பு (2) புவி வெப்பமடைதல்
(3) ஓசோன்படலம் பாதிக்கப்படுதல் (4) அமில மழை பெய்தல்

39. கைத்தொழில் கழிவுகள் சூழலில் விடுவிக்கப்படும்போது மிகவும் அபாயகரமானதாக விளங்கும் கழிவுப்பொருள் எது?
(1) கனிய எண்ணெய்க் கழிவுகள்
(2) உலோகக் கழிவுகள்
(3) அணுசக்திக் கழிவுகள்
(4) பொலித்தீன் கழிவுகள்

40. பேண்தகு அபிவிருத்தியை அடையும் பொருட்டு நிறைவேற்ற வேண்டிய சூழல் அபிவிருத்தி விடயங்கள் இரண்டினைக் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.
A - சூழல் நேய வளங்களின் நுகர்வு
B - சமூகப் பாதிப்புக்களைத் தவிர்த்தல்
C -அழகியல் சார் அம்சங்களைளப் பாதுகாத்தல்
D - சமூகப் பங்குபற்றுதலை அதிகரித்தல்
E - மனப்பாங்கு விருத்தி

(1) A யும் B யும் (2) C யும் D யும் (3) B யும் E யும் (4) A யும் C யும்

(40 X 1 = 40 புள்ளிகள்)


kalvi.lk

## குடியியற் கல்வி - II

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **முதலாம் வினாவுற்கும் வேறு நான்கு வினாக்களும் உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.**

**01.** (i) சனநாயக ஆட்சியின் நடைமுறைக்காக சுதந்திர ஊடகங்களால் நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்புக்கள் **இரண்டு** தருக.

(ii) ஒரு நாட்டின் சமூக நீதி வீழ்ச்சியடைதல் மற்றும் பொருளாதார வளர்ச்சி மந்தகதியடைதல் ஆகியவற்றில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் **இரண்டு** தருக.

(iii) ஐக்கிய அமெரிக்காவில் மாநில அரசுகளுக்கு உரித்தான அதிகாரங்கள் **இரண்டு** தருக.

(iv) மோதல் தீர்வு முறையில் நடுநிலையாளராகத் தலையீடு செய்யக்கூடிய சந்தர்ப்பங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(v) நிலையான அபிவிருத்தியின்போது கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் **இரண்டு** தருக.

(vi) தேசிய சட்டத்தில் காணப்படும் வகைகள் **இரண்டு** தருக.

(vii) 1972ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட முதலாம் குடியரசு யாப்பின் மூலம் ஏற்படுத்தப்பட்ட முக்கிய அம்சங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(viii) சூழலில் இருந்து மனிதனுக்கு கிடைக்கும் சேவைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(xi) சர்வதேச உறவுகள் ஏற்படும் வழிமுறைகளில் ஒன்றான தூதுவர் சேவையில் தூதுவர்களின் பொறுப்புக்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(x) வளங்களின் வினைத்திறனை முன்னேற்றுவதற்கு உலகில் பயன்படுத்தப்படும் வழிமுறைகள் **இரண்டைக்** குறிப்பிடுக. (10 X 2 = 20 புள்ளிகள்)

**02. "தேசிய அரசுகளின் மூலக்கூறுகளில் அரசாங்கமும் ஒன்றாகக் காணப்படுகின்றது"**

(i) பேராசிரியர் காணரின் வரைவிலக்கணத்தின்படி அரசாங்கம் என்பதனை வரையறை செய்க. (2 புள்ளிகள்)

(ii) பாராளுமன்ற அரசாங்க முறையின் பண்புகள் **மூன்றினைத்** தருக. (3 புள்ளிகள்)

(iii) (A) அரசாங்கத்தின் துறைகள்(பிரிவுகள்) **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(B) மேலே கூறப்பட்ட துறைகளுள் **ஒன்றினைச்** சுருக்கமாக விளக்குக. (2 புள்ளிகள்)

**03. "வேற்றுமையில் ஒற்றுமை காண்பதற்கு வழிவகுக்கும் ஆட்சிமுறை" சமஷ்டி ஆட்சிமுறையாகும்.**

(i) சமஷ்டி அரசாங்கத்தின் அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ள நிறுவனங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ii) சமஷ்டி ஆட்சிமுறையின் பிரதான பண்புகள் **மூன்று** தருக. (3 புள்ளிகள்)

(iii) (A) சமஷ்டி ஆட்சிமுறையின் அனுகூலங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(B) மேலே கூறப்பட்ட அனுகூலங்களுள் **ஒன்றினை** விளக்குக. (2 புள்ளிகள்)

**04. "மனதளவில் சமாதானத்தை உருவாக்குவதன் மூலம் மோதல் நிலைமையைக் குறைக்கவோ அல்லது நீக்கவோ முடியும்"**

(i) மனதளவில் அமைதியை ஏற்படுத்திக் கொள்வதற்கான வழிமுறைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ii) மோதல் ஏற்படுவதற்கான காரணிகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(iii) (A) மோதல் தீர்வு முறைகளில் இணக்கப்பாட்டாளரின் பணிகள் **மூன்று** தருக. (3 புள்ளிகள்)

(B) இணக்கசபைகள் மூலம் ஆற்றப்படும் பணியினைச் சுருக்கமாக விளக்குக. (2 புள்ளிகள்)



kalvi.lk

**05 "சட்டத்தை மதித்தலும் சட்டத்துக்கு கீழ்ப்படிதலும் ஒவ்வொரு பிரசையினதும் கடமையாகும்"**

(i) இலங்கையின் நீதவான் நீதிமன்றத்தால் விசாரிக்கப்படும் வழக்குகள் **இரண்டைப்** பெயரிடுக. (2 புள்ளிகள்)

(ii) இலங்கையில் நீதிமன்ற நடவடிக்கைகள் சட்டம் தொடர்பிலான உயர் மட்டப் பதவிகள் வகிக்கும் **மூன்று** நபர்களைப் பெயரிடுக. (3 புள்ளிகள்)

(iii) (A) சட்டவாட்சி உறுதிப்படுத்தப்பட்ட சமூகத்தில் காணப்படக்கூடிய பண்புகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(B) மேற்கூறிய பண்புகளுள் **ஒன்றினை** விளக்குக. (2 புள்ளிகள்)

**06 "மனித நடவடிக்கைகள் காரணமாக இன்று இயற்கைச் சூழலில் பாரிய சுற்றாடற் பிரச்சினைகள் தோன்றியுள்ளன"**

(i) சூழற் பிரச்சினைகள் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் மனிதச் செயற்பாடுகள் **இரண்டு** தருக. (2 புள்ளிகள்)

(ii) கற்கோளம் பாதிக்கப்படுவதனால் ஏற்படும் விளைவுகள் **மூன்று** தருக. (3 புள்ளிகள்)

(iii) (A) சுற்றாடல் தொடர்பான பிரசைகளின் பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(B) மேற்கூறிய பொறுப்புக்களில் **ஒன்றினை** விளக்குக. (2 புள்ளிகள்)

**07 "நாடுகளுக்கிடையில் நடைபெறும் அனைத்து விதமான உறவுகளும் சர்வதேச உறவுகள் எனப்படும்"**

(i) சர்வதேச உறவுகள் மேற்கொள்ளப்படும் பிரதான முறைகள் இரண்டைத் தருக. (2 புள்ளிகள்)

(ii) சர்வதேச உறவுகள் வளர்ச்சியடைவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(iii) (A) சர்வதேச உறவுகள் இலங்கை மீது செல்வாக்குச் செலுத்தும் (அழுத்தங்கள்) விடயங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(B) மேலே கூறப்பட்ட விடங்களில் **ஒன்றினை** விளக்குக. (2 புள்ளிகள்)


kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page